# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## M.C.O.P. 40/2022

## CNR.No.TNCB19000

| **Deposition** | : | **PW.2** |
|---|---|---|
| Name | : | வெள்ளிங்கிரி |
| Father's / Husband Name | : | பழனி |
| Village / முகவரி | : | கருவலூர், அவிநாசி |
| Taluk / தாலுக்கா | : | திருப்பூர் |
| Age / வயது | : | 44 |

The witness sweared under Oaths Act 1969 on this the day of 19th June 2025

**முதல் விசாரணை**

நான் கருவலூரில் வசிக்கிறேன்.. நான் வழக்கின் மனுதாரர் சாட்சி ஆவேன். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.**

| **வ. எண்.** | **தேதி** | **ஆவண விபரம்** | **ஆவணத்தின் தன்மை** | **ஆவண வரிசை** |
|---|---|---|---|---|
| 1 | | எனது ஆதார் அடையாள அட்டை | நகல் | ம.சா.ஆ.16 |
| 2 | | எனது வாகனத்தின் பதிவு சான்று | நகல் | ம.சா.ஆ.17 |

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் எனது வழக்கறிஞர் சொல்லி வந்தேன். விபத்தில் இறந்தவர் எனது மனைவியின் சகோதரர்

எனக்கு மச்சினன் ஆவார். விபத்து 23.03.2000 ம் ஆண்டில் நடந்தது. சாட்சி மீண்டும் கொரோனாவுக்கு முன்பு என்று சொல்கிறார். விபத்து அன்னூர் - மேட்டுப்பாளையம் ரோட்டில் நடந்தது. விபத்து இரவு 9.00 மணிக்கு நடந்தது. இறந்து போனவர் ஸ்பிளெண்டர் வண்டியில் வந்தார். இறந்தவர் திருப்பூரிலிருந்து மேட்டுப்பாளையம் நோக்கி வண்டியில் வந்தார். இறந்தவருக்கு பின்னால் நான் எனது வாகனத்தை ஓட்டி வந்தேன். எதிரில் வந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்து ஏற்படுத்திய வாகனம் டெம்போ வாகனம். விபத்து நடந்த ரோடு எத்தனை அடி இருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான்கு சக்கர வாகனம் வரும்போது இரு சக்கர வாகனம் இடது புறத்தில் வரவேண்டும் என்றால் சரிதான். அந்த ரோட்டில் லைட் உள்ளதா என்றால் 1, 2 உள்ளது. அந்த ரோட்டில் லைட் வெளிச்சம் இல்லாததால் எதிரே வந்த வாகனத்தில் இறந்தவர் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

இறந்துபோனவர் வாகனத்தை ஓட்டத் தெரியாமல் ஓட்டி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் இறந்தவர் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல தலைக்கவசம் வெளியே சென்று விட்டது. விபத்து நடந்த உடன் யாருக்கு தகவல் கொடுத்தேன் என்றால் எனது சகோதரிக்கு கொடுத்தேன். காவல் துறைக்கோ 108 க்கோ தகவல் கொடுக்கவில்லை என்றால் ஆம்புலன்சிற்கு சொன்னேன் போலிசாருக்கும் சொன்னேன். போலிசார் என்னை விசாரித்து கையொப்பம் வாங்கினார்கள்.

புகார் யார் கொடுத்தார் என்றால் நான் கொடுத்தேன். எனது அப்பா பெயர் பழனி. குற்றவியல் வழக்கில் என்னை சாட்சி சொல்ல அழைத்தார்களா என்றால் இல்லை. புகார் கொடுத்தன் அடிப்படையில் குற்ற வழக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த நீதிமன்றத்தில்தான் முதலில் சாட்சி சொல்கிறேன். நான் அழைப்பாணை இல்லாமல் இறந்தவர் என் மச்சினன் என்பதால்

எனது சகோதரிக்காகவும்  பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

PW1 Document Dated 12.06.2025
Digitally signed by K PALANIVEL
Date: 2025.06.19 20:03:46 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.